Judicial Form No. 53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KRISHNAGIRI

| | | |
|---|---|---|
| Calendar .. .. | | |
| Miscellaneous .. .. | | |
| Preliminary Register .. .. | | CC.No. 314 /2022 |
| Deposition of witness for | | Prosecution PW 1 |

Name : ராணி

Fathers Name / Husband :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 06th of February 2023.

**(A1 to A4 Present)**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது வரட்டம்பட்டி பூ நகர் கிராமத்தில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் 40 வருடமாக புறம்போக்கு வழிப்பாதை சம்மந்தமாக, அந்த வழிப்பாதை மேடு பள்ளமாக இருந்ததால் மண் கொட்டி சமபடுத்தினோம். கடந்த 18.10.2021-தேதி பகல் 11 மணிக்கு நான் உடல்நிலை சரியில்லாமல் சேலம் மருத்துவமனையில் இருந்து வந்து, அஸ்வினி, பாரதி, மகாலிங்கம் சேர்ந்து பாதையை சரிசெய்து கொண்டிருந்தோம்.

அப்பொழுது எதிரி சுரேஷ் என்பவர் வரிசையாக அவர் வீட்டின் முன்பு கல்லை போட்டு தடுத்தார், நாங்கள் அந்த வழியாக தான் செல்வோம், அப்போது சுரேஷ் கல்லை என் மீது போட்டார் நான் கல் தடுக்கி கீழே விழுந்துவிட்டேன். அப்போது எனக்கு வலதுபக்கம் இடுப்பில் அடிபட்டது இன்னும் அந்த வலி இருக்கிறது. பொன்னி என்பவர் தகாத வார்த்தையால் தேவிடியா, கண்டாரவோலி என்று திட்டினார்கள். மற்றவர்களான பெரியவேடி, சகுந்தலா தேவிடியா, கண்டாரவோலி என்று திட்டினார்கள்.

அடிபட்ட என்னை எனது மகன் காவேரிபட்டிணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். என்னை போலீசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் பாட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். (மேற்படி புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.1-**ஆக குறியீடு செய்யப்படுகிறது**).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:**

சுரேசின் அப்பா பெயர் ராஜப்பன் அவர் ராணுவத்தில் ஓய்வு பெற்றவர். சுரேஷ் ராணுவத்தில் ஓய்வுபெற்றுவிட்டு வங்கயில் காவலராக உள்ளார் என்றால் சரிதான். சுரேஷ்-ன் வீட்டின் முன்னால் சம்பவம் நடந்தத என்றால் சரிதான். சுரேஷ் வீட்டின் சர்வே எண்.233 என்றால் சரியல்ல, சுரேசின் வீடு புறம்போக்கில் உள்ளது. சர்வே எண்.233 ராஜப்பனும், எனது மாமனாரும் சொத்து வாங்கினார்கள் என்றால் ராஜப்பனும், எனது மாமியாரும் சொத்து வாங்கினார்கள். சர்வே எண்.233-ஐ இருவரும் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். ராஜப்பன் வீட்டின் முன்னால் உள்ள அவரது நிலத்தில் நாங்கள் ரோடு போட முயற்சி செய்து அவர்கள் தடுத்தார்கள் என்றால் சரியல்ல, புறம்போக்கு இடத்தில் ரோடு போட்டோம். எதிரிகள் ரோடு போடக்கூடாது என்று தடுத்ததால் எனது கணவர் மாணிக்கம், மகாலிங்கம், சுரேஷ், ஆடலரசு, சஞ்ஜய்காந்தி ஆகியோர் சுரேரையும், மற்றவர்களையும் அடித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளை அடித்ததால் அவர்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றால் நாங்கள் அடிக்கவில்லை. தகவல் கிடைத்து போலீசார் மாணிக்கம் , மகாலிங்கம், சுரேஷ், ஆடலரசு, சஞ்ஜய்காந்தி ஆகியோர் மீது வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். அந்த தகவல் கிடைத்து நாங்களும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து எதிரிகள் மீது புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல, நாங்கள் முன்னாலேயே சிகிச்சைக்கு சேர்ந்தோம். வழி தொடர்பாக 2007-ம் வருடம் எங்கள் மீது குற்ற எண்.131/2007 பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். இது தொடர்பாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சுரேஷ் உடைய நிலத்தில் நாங்கள் அத்துமீறி நுழைந்து ரோடு போட முயற்சி செய்ததால் தடுத்தார்கள் என்றால் சரியல்ல. அவருடைய சொத்தை பாதுகாப்பதற்காக அவர்கள் தடுத்தார்கள் என்றால் அது அவர்களுடைய சொத்து இல்லை. எனது பணபலம் மற்றும் அரசியல் செல்வாக்கை வைத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ஓம்./- கா.கார்த்திக் ஆசாத்,<br>
குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1,<br>
கிருஷ்ணகிரி.